## III. வேதவினா குறுக்கெழுத்துப் போட்டி - 82

### ஆதியாகமம் 36-40 அதிகாரங்கள்



Book - Post

பெறுநர் : திரு/திருமதி

↓↓↓

3. சொப்பனத்திற்கு அர்த்தம் சொல்லுதல் ...................(8)
4. யூதா அடைமானமாய் கொடுத்த மூன்று பொருட்கள். (9)
5. மறுபடியும் உத்தியோகத்தில் வைக்கப்பட்டவன் (10) கடைசி இரு எழுத்துக்கள் →
7. மீதியானியர் யோசேப்பை யாரிடம் விற்றனர்? (5)
9. ஏசா ....................... மலையில் குடியேறினான். (3)
10. போர்த்திபாரின் மனைவி யோசேப்பை ........... மனுஷன் என்றாள் (4) கடைசி எழுத்து →
12. தேவனுக்கு விரோதமாய் ................ செய்வது எப்படி? (3)
13. சகோதரனை விற்றுப் போடும்படி யோசனைக் கொடுத்தவன். (2)

→→→

1. ஏசாவின் மனைவி, இஸ்மவேலின் குமாரத்தி (4)
2. கர்த்தரால் அழித்துப் போடப்பட்ட யூதாவின் மகன். (3)
5. மீறி வந்தவன். (3)
6. ஏலோனின் குமாரத்தி. (3)
8. சகோதரர்களால் பகைக்கப்பட்டவன். (4)
11. கோவேறு கழுதையைக் கண்டுபிடித்தவன். (3) கடைசி எழுத்து ↓
15. ஏசாவின் மறுபெயர். (3)
19. பல்தியேலின் குமாரன். (4)

↑↑↑

15. ஏதோமியரின் தகப்பன். (2)
16. யோசேப்பு ஆடு மேய்த்த தன் சகோதரர்களைக் கண்டுபிடித்த இடம். (4)
17. சகோதரர்கள் யோசேப்புக்கு இட்ட பெயர். (8)

←←←

14. தன்னிலும் நீதியுள்ளவள் என்று யூதாவால் பாராட்டப்பட்டவள் (3) கடைசி எழுத்து ↑
18. குழியில் சகோதரனைக் காணாது தவித்தவன். (3)



SSA

THE SPROUTED STAFF OF AARON

# ஆரோனின் துளிர்த்த கோல்

வேதம் அறிவோம், தேவர்களாவோம்

மாத இதழ் : ஜூன் 2019

## ஆதியாகமம் 24 : 31 (a)

லாபான் : "கர்த்தரால் ஆசிர்வதிக்கப்பட்டவரே, உள்ளே வாரும்.
நீர் வெளியே நிற்பானேன்?"

★★★★★

## ஆவியானவரின் அருட்கொடைகள்

அருளிடும் நாதனே அபிஷேகம்
அக்கினி நாவென அசைவாட
அந்நிய பாஷையில் மகத்துவரின்
அற்புத செயல்தனை விளம்பிடவே.

பலவீன பாண்டமதில் பொழியும்
பலமிகு ஆற்றலாய் வல்லஆவி
பெற்றிட ஈந்திடும் நவவரங்கள்
பெந்தெகொஸ்தே நாளதுபோல்.

தரிசனம் பகிர்ந்திடும் தீர்க்கவுரை
தணியா பக்தியின் விருத்தியோடு
வாலிபர், ஊழியர், மூப்பரென
வானாவி ஊற்றிடும் இந்நாளில்.

பரந்தனில் ஏகமாய் இணைந்திடவே
பரனாவி எங்களில் இரங்கிடுமே
புவிதனில் நவில்ந்திட சாட்சிதனை
புண்ணியர் நல்லாவி நல்கிடுமே!

- திருமதி. **கெட்சி**, பாண்டிச்சேரி

அன்புடையீர், வணக்கம்.

## அனைத்தும் அவர்களுக்கு அனுகூலமாயிருக்கிறதே!?

"அட! அவங்களுக்கு தொட்டதெல்லாம் வாய்க்கிறதே. அப்படி என்னத்தான் செய்வாங்களோ தெரியவில்லையே! அனைத்தும் அவங்களுக்கு அனுகூலமாயிருக்கிறதே!" இப்படிப்பட்ட சாட்சி ஒவ்வொரு கிறிஸ்தவ பிள்ளைகளுக்கும் இருந்தால் எவ்வளவு நலமாயிருக்கும்! "கர்த்தர் அவனோடிருந்தார்; அவன் போகிற இடம் எங்கும் அவனுக்கு அனுகூலமாயிற்று" என்ற ஒரு சான்றிதழை வேதாகமத்தில் எசேக்கியா அரசன் பெற்றிருந்தார். அனைத்திலும் அனுகூலம் பெற அவசியமானவைகள் எவை என்பதை அவரது வாழ்க்கை மூலம் பார்ப்போம். (2 இரா. 18 &19 அதி)

- அவர் கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச் செய்தார். (மீகா. 6:8).
- தேவனுக்கு கொடுக்க வேண்டிய ஸ்தானத்தையும், கனத்தையும், மகிமையையும் அவருக்கே கொடுத்தார். மேடைகளை அகற்றி, சிலைகளைத் தகர்த்து, விக்கிரகத் தோப்புகளை வெட்டினார். கர்த்தருக்கென்று நாட்டை சுத்தப்படுத்தினார்.
- அர்த்தமற்ற பாரம்பரியங்களை உடைத்துப் போட்டார். இஸ்ரவேல் புத்திரர் வெகுகாலமாய் வெகு வைராக்கியமாய் தூபங்காட்டி வந்த மோசே பண்ணியிருந்த வெண்கலச் சர்ப்பத்தை உடைத்துப் போட்டார்.
- தேவனாகிய கர்த்தர்மேல் அசைக்க முடியாத நம்பிக்கையை வைத்திருந்தார். (நீதிமொழிகள் 28:25; 29:25) கர்த்தரை விட்டுப் பின்வாங்கவில்லை. சூழ்நிலை சாதகமகவோ பாதகமாகவோ எப்படியிருந்தாலும் கர்த்தரைக் கருத்தாய்ப் பற்றிக் கொண்டார். (சங்கீதம்.16:8)
- பலம் வாய்ந்த எதிரி வந்தபோது சரணடையாமல் கர்த்தரைச் சார்ந்திருந்தார்.
- கர்த்தருடைய கற்பனைகளை கைக்கொண்டு நடந்தார். (யாக்கோபு 1:22) சாலொமோனின் நீதிமொழிகளைத் தொகுத்தெழுத்துவதற்கு ஏற்பாடு செய்தார். (நீதி. 25:1)
- கீயோன் நீருற்றிலிருந்து தண்ணீரை சுரங்கபாதை அமைத்து எருசலேமின் நீர்த்தேவையை நிறைவு செய்தார்.

எனவே, எசேக்கியா ராஜாவுக்கு அனைத்தும் அனுகூலமாயிற்று. (2 இராஜாக்கள் 18:1-7) நமக்கும் இவ்வித அனுகூலம் தேவையல்லவா? எசேக்கியா தேவனை சேவித்ததுப்போல நாமும் ஆண்டவரை பிரியப்படுத்தி சாட்சியாக வாழ்ந்து சொந்த குடும்ப காரியங்களிலும், சபையிலும், சமுதாயத்திலும், வேலை ஸ்தலங்களிலும் அனுகூலங்களை அடைவோமாக! ஆமென்.

- திருமதி. **எஸ்தர் ராபின்சன்,** சென்னை



## கடந்த மாத வேதவினா போட்டிகளில் கலந்து கொண்டவர்கள் செல்வி / செல்வன்/ திருமதி / திருவாளர்.

**I.** 1. பிரியா ஜெனிட்டா, 2. சான்யா ஷெர்லின், 3. சாரா லின்சி கோல்டு, 4. ஹெப்சி பானுமதி, 5. ஜெஃப்ரி **II.** 1. P.D. கமலம்

**I & III.** 1. ஷாலினி இம்மானுவேல், 2. ஜெயசீலி பால்ராஜ், 3. ஜெயசீலி ஜெயராஜ்

**II & III.** 1. J. ஏஞ்சலினா, 2. காந்தா மனோகரன், 3. சுகந்தி ஜோன்ஸ், 4. ஜெபசீலி ஜெயக்கொடி, 5. சாந்தி குணா, 6. பியூலா ஜேசுராஜன், 7. லதா வேதக்குமாரி, 8. அன்னமேரி ராஜ், 9. ஜாய்ஸ் மணிமொழி, 10. ஜாய்ஸ் சுசீலா தேவி, 11. மல்லிகா எட்வின், 12. ஜோன் பொன்முடி, 13. S. தனபாக்கியம், 14. சுகுணா எலிசபெத், 15. லேயாள், 16. கிரேசி பிரான்சிஸ், 17. T. சுகந்தா, 18. பியூலா அன்புமலர், 19. G.T. ஜூலி, 20. பியூலா ஜெயபிரகாஷ், 21. I. டெய்சி, 22. D. சுதந்திர தேவி, 23. ரோப்பா கிறிஸ்டல், 24. S. செல்வமணி, 25. மெர்ஸி ஞான ஜீவியம், 26. ரேவதி ஜெயசிங், 27. தேவதாஸ் செல்வகுமார், 28. சின்னம்மாள் மேரி, 29. ஏஞ்சலின் சிந்தியா

**III.** 1. M. பத்மாவதி, 2. குணத்திலகா யோனத்தான், 3.மாலா நெப்போலியன், 5. சகுந்தலா தன்ராஜ், 6. சுகந்தி செல்வராஜ், 7. ஜெயசீலி செல்லையா, 8. சித்ரா பாபு, 9. சலோமி எட்வின், 10. G. எலிசபெத், 11. ராணி வில்சன்

**I, II & III:** 1.ஜூலியா சார்லி, 2. ரபேக்காள் ஐசக், 3. சாந்தி வில்லியம், 4. ஒலிவியா லாங்டன், 5. மார்கிரேட் எலிசபெத், 6. செலைன் ராணி டேவிட், 7. மோனிகாள் காந்திநாத், 8. ஜோசப் அதிசயம், 9. திலகவதி அதிசயம், 10. நிர்மலா டேவிட், 11. ஹெலன் சேசுராஜ், 12. கிறிஸ்டபெல் நிர்மலா, 13. சூசன் சுமித்ரா, 14. தெல்மி, 15. விமலா ரோசபெல், 16. கிரேஸ் பிராங்கிளின், 17. மனோகரி பெஞ்சமின், 18.மீரா பாண்டியன், 19.சந்திரா இம்மானுவேல், 20.M. எலிசபெத், 21.M.S.ஜேம்ஸ், 22. பாக்கியராணி, 23. ரீட்டா ரோசலிண்ட், 24. ஐவி கலாவதி, 25. J.மிராண்டா, 26. தேவகிருபா, 27. ஜெயசீலி ரவிச்சந்திரன், 28. இமெல்டா சுந்தர்சிங், 29. ருவல்யா அருள்பிரகாசம், 30.ரோசலின் திலகவதி, 31. ஆலிஸ் ஜோசியா, 32. பியூலா நவமணி, 33. பாலின் மார்டீன், 34. அன்புக் கமலம், 35. மரிய புஷ்பம், 36. ஆஸ்பி வியாகுலின், 37. சம்பத் இளங்கோவன், 38. ஆஸ்டின் ஸ்மித், 39.ஹெப்சி அசரியா, 40. ரூபி அகஸ்டின், 41. விமலா குழந்தைசாமி, 42. கலாவதி தயாளகரன், 43. ஜாஸ்மின் உஷா ராணி, 44. ரெஜினா மேரி மனோகரன், 45.நகோமி எடிசன், 46. எஸ்தர் பியூலா யோவான், 47. ராணி சாந்தகுமார், 48. சாந்தி ஜோயல், 49. கீத்தா கிறிஸ்டோபர், 50. ரூபி காட்பிரே, 51. நலந்தா டேவிட், 52. நான்சி தெபொராள், 53. எஸ்தர் ராஜேந்திரன், 54. வினோத்பால், 55. ஜாகுலின் உஷா, 56. கமலா ஜார்ஜ், 57. எஸ்தர் ஆலன், 58. வித்யா வில்சன், 59. ஜாய் ஜோசப், 60. ஆனி கில்சன், 61. கிறிஸ்டினா பெஞ்சமின், 62. நகோமி எடிசன்

பரிசு பெறுபவர்கள் :

1. திருமதி. **ரபேக்காள் ஐசக்** காரைக்குடி, 2. திருமதி. **ராணி வில்சன்** லால்குடி, 3. திருமதி. **ரூபி காட்பிரே** திருச்சி.

# II. வேதாகமப் புதிர் - 28

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| பு | ர | ட் | டி | த் | ய் | மா | ப | ற் | அ |
| ன் | ரு | ர் | ப் | ன் | ஆ | ழி | ன் | ர் | டை |
| னை | க | ஷ | ப | ரா | சீ | ம் | மோ | வி | ந் |
| உ | வ | ரூ | ன் | ய | ய | ன் | ர் | எ | தா |
| ய | னை | ய | ப | தி | ய் | போ | தி | ம் | ன் |
| மை | ரி | டே | த் | வ | நீ | செ | ரா | கே | ல் |
| சூ | ஆ | பா | கா | தா | தி | ம | கு | வெ | ள் |
| லொ | ம் | ன் | கு | க் | போ | ப் | யா | ங் | னா |
| ச | ம் | ப | ள | ம் | த் | யெ | ல | க | தீ |

**ஆதியாகமம் 29-32 அதிகாரங்கள்**

1. இவ்வேத பகுதியில் உள்ள 19 வார்த்தைகள் குறுக்கும் நெடுக்குமாக, வல இடமாக, மேலும் கீழுமாக இடம் பெற்றிருக்கின்றன. அவற்றைக் கண்டுபிடித்து வசன இருப்பிடம் எழுதி வரிசைப்படுத்தவும்.

2. சிதறியுள்ள 24 எழுத்துக்களை ஒழுங்குப்படுத்தினால் யாக்கோபின் உறுதியான போராட்ட ஜெபமொழி வெளிப்படும்.

## II. வேதாகமப் புதிர் - 27விடை

**நீர் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டவராமே.**

**ஆதி. 26 : 29**

## Ephesians - 4: 32

**Have you ever heard of one snake eating another snake? According to zoo keepers, two of these reptiles will sometime grab different ends of the same piece of food. Sooner or later their struggle for that last bite brings them nose to nose. Then comes the surprise. The snake with the widest bite will keep right on going and actually swallow the other.**

**Christians have been known to "consume one another" too. The apostle Paul reminded us in Galatians 5: 15 that words and emotions can get out of hand - even among Christians. When this happens, feelings get hurt, friendships are destroyed, the church becomes divided, and the body of Christ suffers.**

**Hence, it is crucial that we ask the Lord daily to help us to "be kind to one another, tender hearted, forgiving one another." (Eph. 4:32)**



## ஆழத்தில் வலை வீசுவோம் - 33/ஆதி. 4

தேவனது சிருஷ்டிப்பின் மகத்துவங்கள் தொடர்கின்றன :

ஏதேன் தோட்டத்திலிருந்து புறப்படும் நதி நான்கு ஆறுகளாயிற்று எனும் வசனம் மூலம் தேவன் தனது தெய்வீக திட்டத்தை மறைபொருளான அடையாளமாக வைத்திருப்பது பற்றி இங்கு காண்போம். வேத ஆராய்ச்சியில் முன்னணி வகிக்கும் வேதமாணக்கர்களின் கருத்துக்கள் இவை.

ஏதேனிலிருந்து வரும் ஒரு நதி என்பது முழு மனுக்குலத்தைக் குறிப்பதாகவும் நான்கு ஆறுகள் என்பது உயிர்த்தெழுதலுக்குப் பின் கிறிஸ்துவின் இராஜ்ஜியத்தில் நிலவ இருக்கிற நான்குவித வகுப்பாரை அடையாளப்படுத்துவதாகவும் இருக்கின்றன. பைசோன் எனும் முதலாம் ஆறு - தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் முன்பாக நித்திய ஜீவனை சுதந்தரித்து என்றும் வாழும் பொன்னாகிய தெய்வீக சுவாபத்தைப் பெற்ற கிறிஸ்துவின் மணவாட்டியான உன்னத சபை ஆகும். இவர்கள் 1 பேதுரு 2 : 9, வெளி. 7, 4-8 வசனத்தில் சொல்லப்பட்ட ஜனம். இவர்கள் மற்ற மக்களுக்கு அழைத்தவரின் புண்ணியங்களை அறிவிப்பவர்களாயும், நீதியை நிலைநாட்டும் அரசர்களாகவும் (1கொரி 6 : 2-3) ஜனங்களை ஆசீர்வதிக்கும் ஆசாரியர்களாயும் இருப்பார்கள். (வெளி. 20 :6)

எத்தியோப்பிய தேசம் முழுதும் சுற்றி ஓடும் கீகோன் எனும் ஆறு, திரள் கூட்டம் (வெளி. 7:9-17) என்று வர்ணிக்கப்படும் ஊழியம் செய்யும் மணவாட்டியின் தோழி வகுப்பார் ஆவார்கள். இன்று இவ்விரு ஆறுகளும் பூவுலகில் இல்லை. இவ்விதம் இவ்விரு வகுப்பாரும் ஆவிக்குரிய வானமண்டலத்தில் இருப்பர்.




இதக்கேல் என்ற யூப்பிரடிஸ் எனும் மூன்றாம் ஆறும், ஐபிராத்து எனும் நான்காம் ஆறும் பூமியில் இன்றும் ஓடும் ஆறுகளாகும். எனவே இவர்கள் உயிர்த்தெழுதலில் புவியை சுதந்தரிக்க இருக்கும் வகுப்பார்கள் ஆவார்கள். இதக்கேல் என்பது ஆபேல் துவங்கி யோவான் ஸ்நானகன் வரையிலான நீதிமான்களையும், முற்பிதாக்களையும், தீர்க்கதரிசி -களையும் அடையாளப்படுத்து கிறது. (எபி.11:39, 40) இவர்கள்

மேன்மையான உயிர்த்தெழுதலைப் பெற்று மாம்சத்தில் பூரணப்பட்டவர்களாக பூமியை சுதந்தரித்து மக்களை ஆண்டு நல்வழிப்படுத்தும் பிரபுக்களாக இருப்பர்.

நான்காம் ஆறு யூதா நிரூபத்தில் உள்ள வ.3 கூறும் பொதுவான இரட்சிப்பை பெற்றவர்கள். கிறிஸ்துவையும் அவரது மீட்பையும் அறியாதவர்களும், அவிசுவாசிகளுமாய் மரித்த இவர்கள் முழுமையான சரீர நிலையைப் பெற்று உயிர்த்தெழுவார்கள். இவர்களுக்கு சத்தியம் போதிக்கப்படும் (ஏசா. 11:9, 1 தீமோ. 2:4) அவற்றை விசுவாசித்து கீழ்ப்படியவர்கள் சீர்பொருந்தி மாம்சீக பரிபூரணத்தைப் பெற்று பரிசுத்த வழியாகிய பெரும்பாதையில் நடப்பார்கள். (ஏசா. 35:10, யோபு. 33:25) நாம் யாவரும் முதலாம் உயிர்த்தெழுதலுக்கு பங்குள்ளவர்களாயும் பாக்கியவான்களுமாயும் இருக்கும்படி வாழ்வோம்.

உயிர்ந்தெழுந்திருந்தாலும் ஏசா. 26:10-ம் வசனத்தின்படி கர்த்தருடைய மகத்துவத்தைக் கவனியாது, மறுதலித்து மனந்திரும்பாமல் இருப்போர் இரண்டாம் மரணத்தை அடைந்து என்றைக்கும் காணப்படாமல் போவார்கள்.

தேவன் ஆதி. 2:16-17 வசனங்களில் ஆதாமோடு உடன்படிக்கை செய்கிறார். திருமறையை ஒரு உடன்படிக்கையின் புத்தகம் என்றே கூறலாம். பல வேளைகளில் தேவன் மனிதனோடு உடன்படிக்கை செய்ததை கீழ்க்கண்ட படத்தின் மூலம் அறியலாம்.




**ஆதாரம் : வாழ்வியல் விளக்க வேதாகமம்**



# I. READ AND RECOGNISE : 28




Read and Recognise, வேதாகமப் புதிர், வேதவினா குறுக்கெழுத்துப் போட்டிகளில் அனைவரும் பங்கு பெறலாம். **25.06.2019**க்குள் விடை அனுப்பப்பட வேண்டும். குலுக்கல் முறையில் பரிசுகள் உண்டு.

பதில் அனுப்பப்பட வேண்டிய முகவரி :
திருமதி. **ஷர்லி காலின்ஸ்**
120/4, சீயோன் ஆலய வளாகம்,
திருச்சி – 620 008.

**97914 09192 என்ற அலைபேசி எண்ணுக்கு கருப்பு மையில் பதிலையும் பெயரையும் தெளிவாக எழுதி Whatsapp மூலம் பதிலை அனுப்பலாம்.**

## Guidelines :

a. Bible Portion : Luke 3 & 4 Chapters

b. All answers begin with the letter "J"

c. Letters can be used any number of times. d. Give the reference.

**Questions :**

1. Who was the son of Heli?
2. Jesus returned from ............................ and was led by the Spirit in the wilderness for forty days.
3. Jesus was preaching in the synagogues of .................
4. Joda is the son of .......................
5. Who is the son of Eliezer?
6. ...................... is the father of David.
7. The devil took Jesus to .................. and set him on the pinnacle of the temple.
8. .......................... is the grand son of Issac.
9. ............................ is the son of Mahalelah.
10. ................ returned in the power of the Spirit to Galilee.

**Answers : I. Read and Recognise : 27 (Luke 1 & 2)**

**1. grew 2:40**
**2. Greetings 1:28**
**3. gladness 1:14**
**4. governor 2 :2**
**5. God, give 1:32**
**6. good great 2:10**
**7. great 2:48**
**8. generation, generation 1:50**
**9. glory 2 : 9**
**10. Gabriel God, Galilee 1: 26**

**SSA -19 வேதாகமப் போட்டி** :- வரும் **10.11.2019** ஞாயிறு காலை 11.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை **ஆதியாகமத்தில்** வேதாகமப் போட்டி நடைபெறும். **கேள்வி எண்ணிக்கை : 100, கேள்வி வகை : பதிலைத் தெரிவு செய்தல் மட்டுமே.** அனைவரும் கலந்து கொண்டு பயன் பெற அழைக்கபடுகிறீர்கள்